# நிஸுயின்(திருமணம்)

நிஸுயின் ( Nissuin ) என்ற எபிரெய வார்த்தைக்கு திருமணம் என்று அர்த்தம். கணவன் மனைவி என்ற உறவு தேவனால் ஆதியிலே உண்டாக்கப்பட்டது. ஆதி 2 : 22. 'தேவனாகிய கர்த்தர் தாம் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி, அவளை மனுஷனிடத்தில் கொண்டுவந்தார்". ஆதியிலே மனுஷனை உண்டாக்கினவர் அவர்களை ஆணும் பெண்ணுமாக உருவாக்கி அவர்களை குடும்பமாக இணைத்தார். மல்கியா இதைக் குறித்து அழகாக எழுதுகிறார். மல்கியா 2 : 15. 'அவர் ஒருவனையல்லவா படைத்தார்? ஆவி அவரிடத்தில் பரிபூரணமாயிருந்ததே. பின்னை ஏன் ஒருவனைப் படைத்தார்? தேவபக்தியுள்ள சந்ததியைப் பெறும்படிதானே'. அப்படியானால் திருமணம் என்பதின் தேவ நோக்கமே தேவ பக்தியுள்ள சந்ததியை பெற்றெடுக்கும்படிதான்.

வேதாகம காலங்களிலே திருமணம் எப்படி செய்யப்பட வேண்டும் என்பதற்கு முறை இருந்தது. நியாயப்பிரமாண கட்டளைகளிலே ஒன்றாக 'ஒருவன் ஒரு ஸ்திரீயை விவாகம்பண்ணிக்கொண்டபின்பு' உபா 24 : 1 ( விவாக முறையாய் விவாகம்பண்ணிக்கொள்ள வேண்டும் ) என்பது பிரமாணம். ஆனால் இன்றைக்கு திருமணக் காரியம் மனிதராலும், மனிதர் முறைகளாலும், பணத்தினாலும் நிர்ணயம் செய்யப்படுகிறது. இதன் விளைவு தள்ளி விடுதலும், வெறுப்பும், பிரிவுகளும், மன வேதனைகளும், கண்ணீர்களும், உண்டாயிருக்கின்றன. வேதாகம திருமணமுறை என்பது என்ன என்ன முறைகளில் இருந்தது என்பதை நாம் வேதத்தின் மூலமாகவும் இஸ்ரவேல் மக்களின் முதலாம் நூற்றாண்டுகளில் அதாவது இயேசு கிறிஸ்துவின் நாட்களில் செய்யப்பட்ட திருமண முறைகள் மூலமாகவும் அறிந்து கொண்டு பின்பற்றுவோமானால் திருமண பந்தம் தேவனோடு இணைந்ததாக உறுதியாகவும் திருமண வாழ்க்கை மகிழ்ச்சியாகவும் இருக்கும்.

இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை மணவாட்டியான சபையாகிய நம்மை சேர்த்துக்கொள்ளும்படியாக இருக்கிறது. ஒவ்வொரு மனிதனுடைய நித்தியத்தையும் நிர்ணயிக்கிறது. இயேசு கிறிஸ்துவின் நாட்களில் யூத திருமண முறை அவருடைய இரண்டாம் வருகையையும் கிறிஸ்தவ வாழ்க்கை முறையையும் குறித்த பல காரியங்களை வெளிப்படுத்துகிறதாக இருக்கிறது.

வேதாகம காலங்களில் திருமண வயது என்பது ஆண்களுக்கு 18 என்பதும் பெண்களுக்கு 13 முதல் 16 வரை இருந்தது. ஆனாலும் ஆண்கள் குடும்ப சூழ்நிலைகள் காரணமாக 40 வயதில் கூட திருமணம் செய்து கொண்டார்கள். ஆனால் தற்போதைய காலத்தில் கல்வி, வேலை, மன பக்குவம் என்பதை

அடிப்படையாய் வைத்து ஆண்களுக்கு 27 வயது முதலும் பெண்களுக்கு 23 வயது முதலும் திருமணம் ஒழுங்கு செய்யப்படுகிறது.

இந்த திருமணம் என்ற காரியத்தில் வருகிற கதாபாத்திரங்கள் யார் யாரென்றால் மணமகன், மணமகள், அவர்கள் பெற்றோர் மற்றும் நண்பர்கள். ஆவிக்குரிய காரியத்தில் மணமகன் என்பது இயேசு கிறிஸ்துவையும் மணமகள் என்பது சபையையும் தனிப்பட்ட ஒவ்வொரு தேவ பிள்ளையையும் குறிக்கிறது. மணமகனின் தகப்பன் என்பது நம் தேவனாகிய கர்த்தரைக் குறிக்கிறது. மணமகளின் தகப்பன் என்பது நம்மைக் கர்த்தருக்குள் சிட்சித்து போதித்து கர்த்தருக்குள் நேர் வழியாய் நடத்துகிற ஆவிக்குரிய தலைவர்களைக் குறிக்கிறது. பவுல் 1 கொரிந்தியர் 4 : 15ல் ‘கிறிஸ்துவுக்குள் பதினாயிரம் உபாத்தியாயர்கள் உங்களுக்கு இருந்தாலும், தகப்பன்மார் அநேகர் உங்களுக்கு இல்லையே’ என்று வேதனைப்படுகிறார். மணமகளின் தாய் என்பவர்கள் நம்மை கர்த்தருக்குள் பெலப்படுத்தி வளர்க்கிற தேவ ஊழியக்காரரைக் குறிக்கிறது. நண்பர்கள் என்பவர்கள் உலகமெங்கும் இருக்கிற தேவனால் மீட்கப்பட்டவர்களைக் குறிக்கிறது.

முதலாம் நூற்றாண்டு யூத திருமணத்தில் 14 படிகள் இருந்தன. அவைகளை நாம் கற்றுக் கொள்வது நமக்கு பிரயோஜனமாயிருக்கும். அவைகளைக் குறித்து ஒவ்வொன்றாய் பார்ப்போம். திருமண நாளில் குடும்ப உறவை ஏற்படுத்துகிற தேவன் தாமே உங்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக.

இவாஞ்சலின் ஜெபசீலன்

## 1. மணமகனின் தகப்பன் முதலில் முயற்சிகளை எடுப்பார்.

யூத திருமணங்களில் முதன் முதலாக மணமகனின் தகப்பனார் மணமகனுக்கு ஏற்ற மணமகளை இஸ்ரவேலரின் 12 கோத்திரங்களுக்கு மாத்திரம் உட்பட்டு பார்க்க ஆரம்பிப்பார். புறஜாதிகளோடு அவர்கள் கலக்க மாட்டார்கள். எண் 23 : 9. கன்மலையுச்சியிலிருந்து நான் அவனைக் கண்டு, குன்றுகளிலிருந்து அவனைப் பார்க்கிறேன்; அந்த ஜனங்கள் ஜாதிகளோடே கலவாமல் தனியே வாசமாயிருப்பார்கள். ஆவிக்குரிய இஸ்ரவேலராகிய நாமும் திருமண காரியங்களில் இரட்சிக்கப்பட்ட ஆவிக்குரிய பிள்ளைகளை திருமணத்தில் இணைக்கும்போது அவர்கள் திருமண வாழ்க்கை மகிழ்ச்சியாய் ஆசீர்வாதமாய் அமைவதைக் காண முடியும். மணமகளின் தகப்பன் தாய் உடன்பிறந்தோர் எல்லோரையும் அவர்கள் குணங்களின் அடிப்படையில் ஆராய்ந்து மணமகளை தேர்வு செய்வார். அந்நாட்களில் ஒருவரை அறிமுகம் செய்யும்போது அவர்கள் தகப்பன் பெயரைக் கொண்டே சொல்லுவார்கள். இதை வேதாகமம் முழுவதிலும் காணலாம். இயேசுவும் யோசேப்பின் குமாரன் எனப்பட்டார். திருமண காரியங்களில் தகப்பனே எல்லா முடிவுகளையும் எடுப்பார்.

எல்லோரும் அவற்றை முழுமையாக ஏற்றுக் கொள்வார்கள். தற்காலங்களில் இவை மாறி இருக்கிறதைக் காண்கிறோம்.

யோவான் 6 : 44. ‘என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான்; கடைசிநாளில் நான் அவனை எழுப்புவேன்”. யோவான் 6 : 65. ‘ஒருவன் என் பிதாவின் அருளைப்பெறாவிட்டால் என்னிடத்திற்கு வரமாட்டான் என்று இதினிமித்தமே உங்களுக்குச் சொன்னேன்’ என்றார். யோவான் 6 : 37. ‘பிதாவானவர் எனக்குக் கொடுக்கிறயாவும் என்னிடத்தில் வரும்; என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை’ ஆகிய வசனங்கள் பிதா ஒருவரே தன் குமாரனாகிய இயேசுவுக்கு மணமகளாக தேவ பிள்ளைகளை தெரிந்தெடுத்துக் கொடுக்கிறார் என்பதை காண்பிக்கிறது.

வெளி 7 : 9. ‘இவைகளுக்குப்பின்பு, நான் பார்த்தபோது, இதோ, சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக்கண்டேன்’ என்ற வார்த்தை இயேசு கிறிஸ்துவின் மரணத்தினிமித்தம் மணவாட்டியாம் சபையிலே இஸ்ரவேலரும் புறஜாதியாரும் ஏகமாய் இருப்பதைக் காண்பிக்கிறது.

## 2. மணமகன் மணமகள் சம்மதம் தெரிவித்தல்

யூத பாரம்பரியங்களில் திருமணத்தை முடிவு செய்வதற்கு முன் மணமகனிடமும் மணமகளிடமும் ஒருவரையொருவர் குறித்து அறிவித்து இருவருடைய சம்மதத்தையும் கேட்பார்கள். அவர்கள் சம்மதத்திற்குப் பிறகே திருமணம் ஒழுங்காகும். ஆதி 24 : 57. ‘அப்பொழுது அவர்கள்: பெண்ணை அழைத்து, அவள் வாய்ப்பிறப்பைக் கேட்போம் என்று சொல்லி, 58. ரெபெக்காளை அழைத்து: நீ இந்த மனிதனோடேகூடப் போகிறாயா என்று கேட்டார்கள். அவள்: போகிறேன் என்றாள்’ என்ற வசனங்கள் மணமகளின் சம்மதம் ஈசாக்கு ரெபெக்காளின் திருமணத்தை முடிவு செய்தது என்று பார்க்கிறோம்.

யோவான் 6 : 37 ‘என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை’ என்ற இயேசு கிறிஸ்துவின் மாறாத வார்த்தை அவருடைய சம்மதத்தை பூரணமாக நமக்குத் தெரிவிக்கிறது. மணவாட்டியாகிய நாமும் நம்முடைய பாவங்களிலிருந்து மன்னிக்கப்பட்ட அனுபவத்தைப் பெறும்போது மணவாளனாம் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளுகிற சம்மதத்தை

தெரிவிக்கிறோம். யோவான் 1 : 12. ‘அவருடைய ( இயேசுவின் ) நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்” என்ற வார்த்தை நாம் திருமணத்திற்கு சம்மதம் சொன்னவர்களாக பரலோகவாசிகளாக மாறுவதற்கு ஏதுகரமான காரியமாகிறது. இயேசுவின் வார்த்தையாகிய யோவான் 12 : 32. ‘நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன் என்றார்’ என்ற வார்த்தை பரலோகத்தை இஸ்ரவேலரும் புறஜாதியாரும் நிரப்புவார்கள் என்று நிச்சயப்படுத்துகிறது.

## 3. மணமகனுடைய தகப்பன் பரிசம் கொடுத்தல்

திருமணம் ஒழுங்கான பின் மணமகனுடைய தகப்பன் மணமகளுக்கு பரிசம் கொடுக்க வேண்டும். இதை எபிரெய வார்த்தையாகிய மொகர் ( Mohar ) என்ற வார்த்தையினால் குறிக்கிறார்கள். மொகர் என்பது மணமகளின் விலைக்கிரயத்தைக் குறிக்கிறது. ஆபிரகாமின் வீட்டு விசாரணைக்காரனாகிய எலியேசர் ரெபெக்காளுக்கு கொடுத்ததை ஆதி 24 : 53. ‘பின்பு அந்த ஊழியக்காரன் வெள்ளியுடமைகளையும், பொன்னுடமைகளையும், வஸ்திரங்களையும் எடுத்து, ரெபெக்காளுக்குக் கொடுத்ததுமன்றி, அவளுடைய சகோதரனுக்கும் தாய்க்கும் சில உச்சிதங்களையும் கொடுத்தான்’ என்ற வசனம் பரிசம் மணமகனின் தகப்பன் கொடுக்கிற பரிசத்தைக் காண்பிக்கிறது.

யோவான் 3 : 16. தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார் என்ற வார்த்தை பிதாவாகிய தேவன் மணமகனாகிய இயேசுவின் ஜீவனையே மணவாட்டியாம் சபைக்குக் கொடுத்து பரிசத்தை செலுத்தியிருக்கிறார். இதுவே தேவன் மனுக்குலத்தின்மேல் வைத்திருக்கும் அன்பின் ஆழத்தைக் குறிக்கிறது. தேவன் தேவதூதருக்கு இதைச் செய்யாமல் மனிதருக்கு இதைச் செய்திருக்கிறார்.

## 4. மணமக்கள் ஒருவருக்கொருவர் கொடுக்கும் பரிசுகள்

திருமணம் ஒழுங்கு செய்யப்பட்டபின் மணமகன் மணமகளுக்கு ஏராளமான பரிசுகளைக் கொடுப்பார். இயேசு கிறிஸ்து தன்னை ஏற்றுக் கொள்ளுகிறவர்களுக்கு பாவ மன்னிப்பு, ஜீவ புத்தகத்தில் பெயர் எழுதப்படுதல், தேவ சமாதானம், வாக்குத்தத்தங்கள் மற்றும் ஏராளமான ஆசீர்வாதங்களைக் கொடுக்கிறார். ஆவியானவரையும், ஆவியின் கனி, சர்வாயுத வர்க்கம், ஆவியின் வரங்கள் போன்றவற்றையும் கொடுத்து ஆவிக்குரிய வாழ்க்கையில் நாம் வளர உதவி செய்கிறார்.

மணமகள் மணமகனுக்கு நளததைலம் எனப்பட்ட விலையேறப்பெற்ற தைலத்தைக் கொடுப்பாள். அந்நாட்களில் இந்திய தேசத்திலுள்ள குஜராத் மஹாராஷ்டிரா மாநிலங்களுக்கு இடைப்பட்ட பகுதிகளிலிருந்து எடுக்கப்பட்ட வாசனை தைலம் இந்திய வியாபாரிகளால் இஸ்ரவேல் தேசத்தின் பகுதிகளில் விற்கப்பட்டது. இந்த வாசனைப் பொருள் மற்றும் இஸ்ரவேல் தேசத்தில் விளையும் நளதச் செடிகளையும் பயன்படுத்தி நளததைலம் கூட்டப்படும். இது மிகவும் வாசனை நிறைந்தது. மரியாள் இயேசுவின் பாதத்தின் மேல் ஊற்றிய பரிமள தைலத்தினால் யோவான் 12 : 3 ‘அந்த வீடு முழுவதும் தைலத்தின் பரிமளத்தினால் நிறைந்தது’ என்று வேதம் கூறுகிறது. இதன் இன்றைய இந்திய மதிப்பு ஏறத்தாழ ஆறு லட்ச ரூபாய்களாகும். இந்தப் பரிசுகளை எபிரெய வார்த்தையாகிய மத்தன் ( Mattan ) என்ற வார்த்தை குறிக்கிறது.

மணவாட்டியாகிய சபை மணமகனாம் இயேசுவுக்குக் கொடுக்கும் பரிசினைக் குறித்து வேதம் 2 கொரிந்தியரில் குறிப்பிடுகிறது. 2 கொரிந்தியர் 2 : 15. ‘இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளேயும், கெட்டுப்போகிறவர்களுக்குள்ளேயும், நாங்கள் தேவனுக்குக் கிறிஸ்துவின் நற்கந்தமாயிருக்கிறோம். என்பதாய் கூறுகிற சாட்சியுள்ள பரிசுத்த வாழ்க்கையே நாம் இயேசுவுக்குக் கொடுக்கும் நளததைலமாக இருக்கிறது.

## 5. மணமகளின் தகப்பன் மணமகளுக்கு கொடுக்கும் ஆசீர்வாதங்கள்

மணமகளின் தகப்பன் தன் குமாரத்திக்கு வாழ்க்கைக்குத் தேவையான சகல ஆசீர்வாதங்களையும் ஆயத்தம் செய்து கொடுப்பார். அதில் ஒன்று நிலங்களை சுதந்தரவீதமாகக் கொடுப்பது. நியா 1 : 12. ‘அப்பொழுது காலேப்: கீரியாத்செப்பேரைச் சங்காரம்பண்ணிப் பிடிக்கிறவனுக்கு என் குமாரத்தியாகிய அக்சாளை விவாகம்பண்ணிக்கொடுப்பேன் என்றான். 13. அப்பொழுது காலேபுடைய தம்பியாகிய கேனாசின் குமாரன் ஒத்னியேல் அதைப் பிடித்தான்; ஆகையால் தன் குமாரத்தியாகிய அத்சாளை அவனுக்கு விவாகம்பண்ணிக்கொடுத்தான். 14. அவள் புறப்படுகையில், என் தகப்பனிடத்தில் ஒரு வயல்வெளியைக் கேட்கவேண்டும் என்று அவனிடத்தில் உத்தரவு பெற்றுக்கொண்டு, கழுதையின்மேலிருந்து இறங்கினாள். காலேப் அவளை நோக்கி: உனக்கு என்னவேண்டும் என்றான். 15. அப்பொழுது அவள்: எனக்கு ஒரு ஆசீர்வாதம் தரவேண்டும்; வறட்சியான நிலத்தை எனக்குத் தந்தீர்; நீர்ப்பாய்ச்சலான நிலங்களையும் எனக்குத் தரவேண்டும் என்றாள்; அப்பொழுது காலேப்: மேற்புறத்திலும் கீழ்ப்புறத்திலும் அவளுக்கு நீர்ப்பாய்ச்சலான நிலங்களைக் கொடுத்தான்’ என்ற வசனங்கள் தகப்பன் தன் குமாரத்திக்குக் கொடுக்கும் சுதந்தரவீதங்களைக் காண்பிக்கிறது.

தேவனும் தன் பிள்ளைகளுக்கு சுதந்தரவீதங்களைக் கொடுக்கிறார். இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தை விட்டு புறப்பட்டு கானானுக்கு வந்தபோது அதை தங்கள் நித்திய சுதந்தரமாக சுதந்தரித்துக் கொண்டார்கள். கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளும் நமக்கு தேவன் பூமியையே சுதந்தரமாகக் கொடுக்கிறார். நம் ஆவிக்குரிய பெற்றோராயிருக்கும் ஊழியரும் நம் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக தங்கள் நேரங்களைக் கொடுக்கிறார்கள். ஆவிக்குரிய சத்தியங்களைக் கற்றுக் கொடுக்கிறார்கள். நீதியின் பாதைகளில் நடத்துகிறார்கள். சங் 141 : 5. நீதிமான் என்னைத் தயவாய்க்குட்டி, என்னைக் கடிந்துகொள்ளட்டும்; அது என் தலைக்கு எண்ணெயைப்போலிருக்கும்; என் தலை அதை அல்லத்தட்டுவதில்லை; அவர்கள் இக்கட்டுகளில் நான் இன்னும் ஜெபம்பண்ணுவேன். இந்த நன்மைகளை மணவாட்டியாகிய சபை பெற்றுக் கொள்ளுகிறது.

## 6. Kiddushin or Erusin ( நிச்சயதார்த்தம் )

Kiddushin என்றால் பரிசுத்தமாகுதல் என்று பொருள். திருமணம் ஒழுங்கு செய்யப்பட்டபின் திருமண நிச்சயதார்த்தம் நடைபெறும். உற்றாரையும் நண்பரையும் அயலகத்தாரையும் அழைத்து மிகவும் சிறப்பாக நிச்சயதார்த்தத்தை நடத்துவார்கள். மணமக்களுக்கு இது மிகவும் முக்கியமான காரியமாகும். நிச்சயதார்த்தத்தை அந்த ஊரிலேயே இருக்கும் ஜெபாலயத்தை நிர்வகிக்கும் ஆசாரியன் நடத்துவார்.

நிச்சயதார்த்தத்தில் கேத்தூபா ( Ketubah ) என்றழைக்கப்படும் Marriage Contractஐ மணமகன் மணமகளுக்குக் கொடுப்பார். இதில் மூன்று பகுதிகள் எழுதப்பட்டிருக்கும். முதல் பகுதியை மணமகனின் தகப்பன் தன் சொந்த கையெழுத்தால் தன் கோத்திரம் என்ன, தன் குடும்பத்தார் எந்த வம்சத்தை சேர்ந்தவர்கள், அதில் எந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்ற விபரங்களை விளக்கமாக எழுதியிருப்பார். தங்கள் குடும்பப் பெருமைகள், மணமகனின் உடன்பிறந்தோர் விபரங்களைக் குறிப்பிட்டிருப்பார். இரண்டாம் பகுதியை மணமகனின் தாயார் எழுதியிருப்பார்கள். அதில் தன் குமாரனாகிய மணமகனைத் தான் எவ்விதமாய் வளர்த்தார்கள், தன் குமாரனுக்கு என்ன பிடிக்கும் என்ன பிடிக்காது, தன் குமாரனுடைய குணங்கள் என்னென்ன என்ற விபரங்களை எழுதியிருப்பார்கள். மூன்றாவது பகுதியை மணமகன் எழுதியிருப்பார். அதில் மொகர் விபரங்கள், மணமகளின் உரிமைகள், மணமகளுக்குத் தான் கொடுக்கும் வாக்குத்தத்தங்கள், தான் மணமகளிடம் என்னென்ன காரியங்களை எதிர்பார்க்கிறார், தான் எப்படியெல்லாம் தன் குடும்பத்தை நடத்த நினைக்கிறார் என்ற காரியங்களும் தன் சொத்து விபரங்களையும் குறிப்பிட்டிருப்பார். இந்த கேத்தூபா முழுவதும் மணமகளுக்காகவே எழுதப்பட்டிருக்கும். இதை மணப்பெண் தன் திருமணத்திற்கு முன்பாக திரும்பத் திரும்ப பலமுறை படித்து தன் புதிய குடும்ப வாழ்க்கைக்குத் தன்னை முற்றிலுமாய் ஆயத்தப்படுத்திக் கொள்வாள்.

தன்னை முற்றிலுமாய் தன் மணவாளனுடைய குடும்பத்தாருக்கு ஏற்ற விதமாய் தன்னை மாற்றிக் கொள்வாள். இல்லாவிட்டால் திருமணம் நடைபெறாது. மாற்றிக் கொள்ளும் போது அவளுடைய குடும்ப வாழ்க்கை மிகவும் மகிழ்ச்சியாய் அமையும்.

தேவனாகிய கர்த்தர் தம்முடைய வாயினின்று புறப்பட்ட வல்லமையுள்ள வார்த்தைகளை வேதாகமமாக நமக்குக் கொடுத்திருக்கிறார். இந்த வேதம் நமக்கு தேவனுடைய திவ்விய குணாதிசயங்களையும், அவருடைய சர்வ வல்லமையையும், குடும்பத்தின் மேலுள்ள அவருடைய திட்டத்தையும் இயேசு கிறிஸ்துவின் அன்பையும், தியாகத்தையும், பிரசங்கங்களையும், அவர் நியாயந்தீர்க்கப் போகிறதையும், ஆவியானவருடைய தேற்றரவின் தன்மைகளையும், வரங்களையும் நமக்குத் தெளிவாகக் காண்பிக்கிறது. இதினிமித்தம் தேவனை அறிகிற அறிவை நாம் அடைகிறோம். நாம் எப்படிப்பட்ட பரிசுத்த வாழ்க்கை வாழ வேண்டும் என்பதை வேதம் நமக்குக் கற்றுக் கொடுக்கிறது. நம்மை நித்தியத்திற்கு ஆயத்தப்படுத்துவது கர்த்தருடைய வேதமே. வேதமே நம்முடைய கேத்தூபா. இந்த வேதத்தின்படி நாம் வாழும் போது நம்மை மணவாட்டியாக ஏற்றுக்கொள்வார்.

## 7. நிச்சயதார்த்தத்தின் தொடர் காரியங்கள்

அடுத்ததாக மணமகன் தன் வாயைத்திறந்து ஒரு அறிக்கையை செய்வார். அது ஓசியா 2 : 19. 'நித்திய விவாகத்துக்கென்று உன்னை எனக்கு நியமித்துக்கொள்ளுவேன்; நீதியும் நியாயமும் கிருபையும் உருக்க இரக்கமுமாய் உன்னை எனக்கு நியமித்துக் கொள்ளுவேன். 20. உண்மையாய் உன்னை எனக்கு நியமித்துக்கொள்ளுவேன்' என்பதே. இதன்பின் தன் சம்மதத்திற்கு அடையாளமாக மணமகன் ஒரு திராட்சரச பாத்திரத்தை எடுத்து அதில் பாதியை குடித்து முடிப்பார். இதன்பின் மணமகள் தன் சம்மதத்தைத் தெரிவிக்கும் வண்ணமாக மீதி இருக்கிற திராட்சரசத்தைக் குடித்து முடிக்க வேண்டும். இதுவே அவர்கள் எல்லோருக்கு முன்பாக தங்கள் சம்மதத்தைக் காண்பிக்கும் காரியம்.

இதைத்தான் தன் இராப்போஜனத்தில் இயேசு சொல்லுகிறார், மத் 26 : 28. 'இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது' என்று. மணவாளனாம் இயேசு மணவாட்டியாம் சபையை நித்திய வாழ்க்கைக்கு ஏற்றுக் கொள்வதற்கு அடையாளமாக தன் ஜீவனையே கொடுத்தார். 1 யோவான் 3 : 16. 'அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்; நாமும் சகோதரருக்காக ஜீவனைக்கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்' என்ற வார்த்தை மணவாட்டி தன் பங்கு திராட்சரசத்தைக் குடிப்பதைக் காண்பிக்கிறது.

மணமகள் தன் சம்மதத்தைத் தெரிவித்தபின் மணவாளன் திருமண நிச்சயத்திற்கு அடையாளமாக பத்து வெள்ளிக்காசுகள் அடங்கின ஒரு செயினை மணமகள் நெற்றியில் அணிவித்து விடுவார். இதனை அணிவித்தபின் 'நீ மோசேயின் சட்டத்தின்படியும் இஸ்ரவேல் தேச சட்டத்தின்படியும் எனக்குப் பிரித்தெடுக்கப்பட்டவள்' என்று கூறுவார். இதன் அர்த்தம் இந்த ஸ்திரீ திருமணத்திற்கு நிச்சயிக்கப்பட்டவள், ஆகவே இனி யாரும் இவளை பெண் பார்க்க வேண்டாம் என்பதே. நாம் இனி சாத்தானுக்குரியவர்களல்ல, இயேசுவுக்குரியவர்கள் என்பதை இது உணர்த்துகிறது.

இதன்பின் மணவாளன் கணவன் என்றும் மணவாட்டி மனைவி என்ற வார்த்தையாலும் அழைக்கப்படுவார்கள். யோசேப்புக்கு நியமிக்கப்பட்ட மரியாளை தேவதூதன் குறிப்படும்போது மத்தேயு 1 : 20ல் மனைவி என்றே குறிப்பிடுகிறதைப் பார்க்கிறோம். ஆனால் அவர்கள் சேர்ந்திருப்பதற்கு அனுமதியில்லை.

## 8. திருமண ஆயத்தம் - மணமகன்

நிச்சயதார்த்தத்திற்கும் திருமணத்திற்கும் இடையில் குறைந்தது அவர்கள் ஒரு வருடமாவது இடைவெளி எடுத்துக் கொள்வார்கள். இந்தக் காலத்தில் மணமகன் தன்னுடைய குடும்ப வாழ்க்கைக்காக Huppah என்றழைக்கப்படும் வீட்டினைக் கட்டுவார். தன்னுடைய சொந்த முயற்சியில் தன்னுடைய தகப்பன் வீட்டிற்கு மேலே தானும் மணவாட்டியும் வசிக்க அறையைக் கட்டுவார். மணமகனின் பெற்றோர் கீழ் தளத்தில் இருப்பார்கள். ஆதி 2 : 23. அப்பொழுது ஆதாம்: இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள்; இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினால் மனுஷி என்னப்படுவாள் என்றான். 24. இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள். இஸ்ரவேல் தேசத்தில் இன்று வரை மாமியார் மருமகள் சண்டை கிடையாது. ஏனென்றால் மேல் வீட்டிலிருந்து அவர்கள் கீழே வரும்போது பெற்றோர்களுடைய ஆசீர்வாதத்தை பெற்றுதான் உலகத்திற்குள் செல்வார்கள் மாலையில் வேலைகளை முடித்து வீட்டிற்கு வந்த பின்பு பெற்றோரின் ஆசீர்வாதத்தை பெற்றுதான் தங்களுடைய அறைக்கு செல்வார்கள்.

யோவான் 14 : 2. 'என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன். 3. நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில்

சேர்த்துக்கொள்ளுவேன்” என்று இயேசு கூறுகிறார். கைவேலையல்லாத நித்திய வீடாகிய பரலோகமே நம்முடைய Huppah.

இந்த ஒரு வருட காலத்திற்கென்று மணமகளை மணமகனுடைய குடும்பத்திற்கு ஏற்றாற்போல் மாற்ற மணமகனுடைய குடும்பத்தைக் குறித்து மிகவும் நன்றாய் அறிந்து வைத்திருக்கிற ஒரு பெண் மணமகளுக்குத் தோழியாக மணவாளனால் அனுப்பப்படுவாள். இந்தப் பெண் மணவாட்டியோடு திருமண நாள் வரையில் கூடவே இருந்து மணவாளனுக்கும், அவர் பெற்றோருக்கும், உடன்பிறந்தோருக்கும் பிடித்த பிடிக்காத விஷயங்களையும் அவர்கள் குணாதிசயங்களையும் பக்குவமாக எடுத்துக் கூறி மணவாட்டியை தன் புதிய குடும்பத்திற்கு ஏற்றாற்போல் உருவாக்குவாள். இதைத்தான் யோவான் 14 : 26. ‘என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்’ என்று ஆவியானவரைக் குறித்துக் கூறுகிறார். ஆவியானவர் நம்மோடுகூட கிறிஸ்துவின் வருகை வரைக்கும் தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் போதித்து நம்மை நித்திய வாழ்க்கைக்கு ஆயத்தப்படுத்துகிறதை வேதத்தின் வாயிலாக அறிகிறோம்.

## 9. திருமண ஆயத்தம் - மணமகள்

மணமகள் இந்த ஒரு வருட இடைவெளியில் Swaddling Bands என்றழைக்கப்படும் ஒரு Towel போன்ற வஸ்திரத்தை தன் கரத்தினால் நெய்வார்கள். இதில் அவரவருடைய கோத்திர ஆசீர்வாதங்களைக் குறிக்கும் அடையாளங்களை சித்திரங்களாக நெய்வார்கள். இந்த வஸ்திரத்தைதான் திருமணத்தன்று ஆசாரியன் மணமகன் மற்றும் மணமகளுடைய கைகளை இணைத்து வாக்குகளைக் கேட்கும்போது இருவருடைய கைகளையும் சுற்றிக் கட்டிக் கேட்பார். இதை இன்றைக்குத் திருமணம் நடத்தும் ஆயர் தன்னுடைய Stoleஐ பயன்படுத்திக் கேட்கிறதைப் பார்க்கிறோம். மணமக்களுடைய முதற்பேறான குழந்தை பிறந்தவுடன் அதைக் குளிப்பாட்டி முதன்முதலாக இந்த வஸ்திரத்தைக் கொண்டு மூடுவார்கள். லூக்கா 2 : 7. ‘அவள் தன் முதற்பேறான குமாரனைப்பெற்று, சத்திரத்திலே அவர்களுக்கு இடமில்லாதிருந்தபடியினால், பிள்ளையைத் துணிகளில் சுற்றி, முன்னணையிலே கிடத்தினாள்’ என்ற வசனத்தில் வரும் துணிகளில் என்ற வார்த்தை இந்த Swaddling Bandsஐ குறிக்கிறது.

மணமகள் இதோடல்லாமல் கேத்தூபாவைத் திரும்ப திரும்ப படிப்பதின் மூலமும் தன்னுடைய சுபாவங்களை மாற்றி மணவாளனுடைய குடும்பத்திற்கு ஏற்றாற் போல் தன்னை மாற்றிக்கொள்வாள். மாம்ச சுபாவத்திற்குரியவர்களாய் இருக்கிற நாம் ஆவியானவர் மூலமாயும் வேதத்தினை தொடர்ந்து தியானிப்பதின்

மூலமும் ஆவிக்குரியவர்களாய் மாறுகிறோம். இரட்சிக்கப்பட்டபின் நாம் கிறிஸ்துவுக்குள்ளாகச் செய்யும் ஒவ்வொரு நற்கிரியையும் நம்முடைய இரட்சிப்பின் வஸ்திரத்தை தேவனுக்கு மகிமையாக அலங்கரிக்கின்றன. வேதம் சொல்லுகிறது ரோமர் 2 : 29. ‘உள்ளத்திலே யூதனானவனே யூதன்; எழுத்தின்படி உண்டாகாமல், ஆவியின்படி இருதயத்தில் உண்டாகும் விருத்தசேதனமே விருத்தசேதனம்; இப்படிப்பட்டவனுக்குரிய புகழ்ச்சி மனுஷராலே அல்ல, தேவனாலே உண்டாயிருக்கிறது’.

## 10. திருமண நாள் ( Nissuin )

திருமணம் எப்பொழுதும் புதன்கிழமையன்றே நடைபெறும். திருமணத்தன்று மணமகனும் மணமகளும் Mikveh எனப்படும் தங்களை சுத்திகரிக்கும் தண்ணீர் முழுக்கைப் பெற்றுக் கொள்வார்கள். தங்கள் பாவங்களை தேவனிடம் அறிக்கையிட்டு தங்களை பரிசுத்தப்படுத்திக் கொள்வார்கள். அதன்பின் காலைமுதல் மாலைவரை உபவாசமிருந்து ஜெபிப்பார்கள். இயேசுவும் இதைக்குறித்து மாற்கு 14 : 25. ‘நான் தேவனுடைய ராஜ்யத்தில் நவமான ரசத்தைப் பானம்பண்ணும் நாள் வரைக்கும் திராட்சப்பழரசத்தை இனி நான் பானம்பண்ணுவதில்லையென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்’. நாம் நித்திய ராஜ்யத்தை சுதந்தரிக்கும் பொருட்டு அதற்காக உபவாசமிருந்து ஜெபிப்பது நம் ஆவிக்குரிய வாழ்க்கையை பெலப்படுத்தும்.

மாலை 6 மணி நெருங்கும்போது மணவாளனும் மணவாட்டியும் திருமண வஸ்திரங்களை தரித்து மற்ற அலங்காரங்களை அணிந்து திருமணத்திற்கு ஆயத்தமாவார்கள். மணமகள் தன் இடத்திலும் மணமகன் தன் இடத்திலும் இருப்பார்கள். மணமகன் தகப்பன் தன் குமாரன் எப்பொழுது புறப்பட வேண்டும் என்பதை முடிவு செய்வார். அவர் அனுமதி கொடுத்தபின்தான் மணமகனும் அவர்கள் வீட்டாரும் திருமணத்திற்கு புறப்பட முடியும். இதை மாற்கு 13 : 32ல் பார்க்கிறோம். ‘அந்த நாளையும் அந்த நாழிகையையும் பிதா ஒருவர்தவிர மற்றொருவனும் அறியான், பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள், குமாரனும் அறியார்’.

அக்காலங்களில் திருமண நாளன்று மணப்பெண்ணைத் திருடிக் கொண்டு போய் ஏராளமான பணத்தை கிரயமாகக் கேட்கும் காரியம் இருந்தபடியால் பெண்ணை மிகவும் பாதுகாப்பாக வைத்திருப்பார்கள். இதைத்தான் வேதம் யோவான் 10 : 10. ‘திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான்’ மற்றும் 1 பேதுரு 5 : 8. ‘தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான். 9. விசுவாசத்தில் உறுதியாயிருந்து, அவனுக்கு

எதிர்த்து நில்லுங்கள்; உலகத்திலுள்ள உங்கள் சகோதரரிடத்திலே அப்படிப்பட்ட பாடுகள் நிறைவேறிவருகிறதென்று அறிந்திருக்கிறீர்களே' ஆகிய வசனங்கள் நமக்குக் காண்பித்துக் கொடுக்கின்றன.

## 11. திருமண நிகழ்வுகள்

மணவாளனுடைய தகப்பனார் அனுமதி கொடுத்தவுடன் எல்லோரும் புறப்படுவார்கள். மணவாளனை Sedan என்றழைக்கப்படும் ஒரு Chairல் வைத்து தூக்கிச் செல்வார்கள். மணவாளனுடைய தோழர்கள் அவரைச் சுற்றிலும் இருந்து பாடல்களைப் பாடிக் கொண்டே வருவார்கள். யோவான் 3 : 29. 'மணவாட்டியை உடையவனே மணவாளன்; மணவாளனுடைய தோழனோ, அருகே நின்று, அவருடைய சொல்லைக் கேட்கிறவனாய் மணவாளனுடைய சத்தத்தைக்குறித்து மிகவும் சந்தோஷப்படுகிறான்; இந்தச் சந்தோஷம் இப்பொழுது எனக்குச் சம்பூரணமாயிற்று' என்று யோவான் ஸ்நானகன் இயேசு கிறிஸ்துவைக் குறித்துச் சொல்லுகிறார். மணவாளன் இருக்கும் இடத்திலிருந்து ஆரம்பிக்கும் இந்த Procession மணவாட்டி இருக்கும் இடம் வரை இப்படியே தொடரும்.

மணவாட்டியின் இடம் வந்தவுடன் அங்கே 10 கன்னிகைகள் மணவாளனை எதிர்கொண்டு போய் வரவேற்பார்கள். இந்த கன்னிகைகள் அங்கே இல்லையென்றால் மணவாளனை சரியாக வரவேற்கவில்லை என்பது மணவாட்டி குடும்பத்திற்கு பிரச்னையாகும். இதைத்தான் இயேசு மத்தேயு 25 : 1 – 13ல் தெளிவாகக் குறிப்பிடுகிறார். இயேசு கிறிஸ்துவின் வருகைக்கு ஆயத்தமாயிருக்க வேண்டிய காரியத்தை இந்த உவமை மிக அழகாக எடுத்துரைக்கிறது. புத்தியில்லாத 5 கன்னிகைகளைப் போலல்லாமல் புத்தியுள்ள மற்ற 5 கன்னிகைகளைப்போல நாம் எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கும்போதுதான் இயேசு கிறிஸ்து இந்த பூமிக்குத் திரும்ப நியாயந்தீர்க்க வரும்போது நாமும் பரலோகத்தை சுதந்தரிக்க முடியும்.

மணவாளனே மணவாட்டியின் வீட்டிற்குள் கடைசியாகப் பிரவேசிப்பார். அவர் நுழைந்தவுடன் கதவு அடைக்கப்படும். அதன்பின் யாரும் உள்ளே நுழைய முடியாது. இதை மத்தேயு 25 : 10. 'அப்படியே அவர்கள் வாங்கிப்போனபோது மணவாளன் வந்துவிட்டார்; ஆயத்தமாயிருந்தவர்கள் அவரோடேகூடக் கலியாண வீட்டுக்குள் பிரவேசித்தார்கள்; கதவும் அடைக்கப்பட்டது. 11. பின்பு, மற்றக் கன்னிகைகளும் வந்து: ஆண்டவரே, ஆண்டவரே, எங்களுக்குத் திறக்கவேண்டும் என்றார்கள். 12. அதற்கு அவர்: உங்களை அறியேன் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். 13. மனுஷகுமாரன் வரும் நாளையாவது நாழிகையையாவது நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள்' என்று கூறுகிறார். ஆகவே நாமும் ஆயத்தமாயிருப்போம்.

## 12. திருமண ஆராதனை

இந்த திருமண ஆராதனையை அதே ஊரிலிருக்கும் ஆசாரியன் 2 சாட்சிகள் முன்னிலையில் உறவினர்கள் நண்பர்கள் கூடியிருக்கிற இடத்தில் வைத்து நடத்துவார். மணவாளன் கட்டின வீட்டிற்கு அடையாளமாக Huppah என்றழைக்கப்படும் ஒரு வெண் வஸ்திரத்தை மணமக்கள் மேல் பிடித்திருக்கிற நிலையில் திருமண ஆராதனை நடைபெறும். மணவாட்டி ஆயத்தம் செய்திருந்த Swaddling Bandsஐ இருவருடைய கரங்களிலும் சேர்த்து கட்டி ஆசாரியன் ஆராதனையை நடத்துவார். இந்த ஆராதனையிலும் இருவரும் திராட்சரசத்தை பகிர்ந்து கொள்வார்கள். Ketubah இதில் வாசிக்கப்பட்டு மணவாளன் வீட்டார் உறுதிமொழிகள் அறியப்படும். ஏழு வகையான Sheva Berakhot எனப்படும் ஆசீர்வாதங்கள் மணமக்கள் மீது கூறப்படும்.

## 13. திருமண விருந்து

திருமணம் முடிந்தபின் திருமண விருந்து 7 நாட்களுக்கு நடைபெறும். மிக உச்சிதமான உணவு வகைகளை விருந்தினருக்கு பரிமாறுவார்கள். ஆடு, கீரை வகைகள், அப்பம், திராட்சைரசம், ஒலிவப்பழங்கள், மீன்கள், Dried Apricots, பேரீட்சை, பாதாம், உலர்ந்த திராட்சை, வாத்து வகை உணவுகள், மாதுளை, அரிசி போன்றவை பரிமாறப்படும்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையின் நாளிலே தேவ ராஜ்யத்தில் பிரவேசிக்கும் பாக்கியத்தைப் பெறுகிறவர்கள் தங்கள் கிரியைகளின்படியே தேவனிடத்தில் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வார்கள்.

## 14. மணமக்களின் மகிழ்ச்சியான வாழ்க்கை

திருமணத்திற்குப் பின் மணமக்கள் இருவரும் மகிழ்ச்சியாய் தங்கள் குடும்ப வாழ்க்கையை நடத்துவார்கள். இதைத்தான் வேதம் 1 தெச 4 : 16. ‘ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். 17. பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்’ என்று குறிப்பிடுகிறது. நித்திய மகிழ்ச்சியான வாழ்வை தேவ பிள்ளைகள் அடைவது எத்தனை பாக்கியம்.

இப்படிப்பட்ட மகிழ்ச்சியை நித்திய நித்தியமாய் நாம் பெற்றுக் கொள்வதற்கு வேதம் நம்மிடத்தில் எதிர்பார்க்கும் காரியம் நாம் பாவி என்பதை உணர்ந்து, அதைக் குறித்து மனஸ்தாபப்பட்டு, அவற்றை ஆண்டவரிடத்தில் அறிக்கையிட்டு, தேவனிடத்தில் பாவ மன்னிப்பைப் பெற்று, தேவ பிள்ளைகளாய் மாறுவதையே.

மாரநாதா!!! ஆமென் கர்த்தராகிய இயேசுவே சீக்கிரமாய் வாரும்.

## ஆண்களுக்கு சொல்லப்படும் ஆசீர்வாதம் :

ஆதி 48 : 20. …தேவன் உன்னை எப்பிராயீமைப்போலவும் மனாசேயைப்போலவும் ஆக்குவாராக என்று இஸ்ரவேலர் உன்னை முன்னிட்டு வாழ்த்துவார்கள்…

## பெண்களுக்கு சொல்லப்படும் ஆசீர்வாதம் :

ரூத் 4 : 11. …கர்த்தர் இஸ்ரவேல் வீட்டைக் கட்டுவித்த இரண்டுபேராகிய ராகேலைப்போலவும் லேயாளைப்போலவும் வாழ்ந்திருக்கச் செய்வாராக;...

## அனைவருக்கும் சொல்லப்படும் ஆசீர்வாதம் :

எண் 6 : 24. கர்த்தர் உன்னை ஆசீர்வதித்து, உன்னைக் காக்கக்கடவர்.

25. கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரகாசிக்கப்பண்ணி, உன்மேல் கிருபையாயிருக்கக்கடவர்.

26. கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரசன்னமாக்கி, உனக்குச் சமாதானம் கட்டளையிடக்கடவர்.